(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 13 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2008, யூலை 25, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0035/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் யூன் 30 ஆம் தேதியன்று ள்ளவாறு சமுர்த்தி வாழ்வாதார உதவியைப் பெற்றுக்கொண்ட குடும்பங் களின் எண்ணிக்கை யையும்,

(ii) பெற்றுக்கொண்ட உதவித் தொகையின் பிரகாரம் மேற்படி குடும்பங்களின் வகைப் பிரிவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளுக்கான பணவீக்கப் பெறுமானத்தையும்,

(ii) பணவீக்கத்தைக் கருத்தில் எடுக்காது 2004 ஆம் ஆண்டை ஓர் அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 2007 ஆம் ஆண்டுவரை அவர்கள் பெற்ற தொகையின் உண்மைப் பெறுமதியையும்,

(iii) பொருளாதாரத்தைத் தவறாகக் கையாண்டதன் விளைவாக உயர் பண வீக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக சமுர்த்தி பெறுநர்களின் கொள்வனவு செய்யும் ஆற்றலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0036/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் யூன் 30 ஆம் தேதியன்றுள்ளவாறு சமுர்த்தி வாழ்வாதார உதவியைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையையும்,

(ii) பெற்றுக்கொண்ட உதவித் தொகையின் பிரகாரம் மேற்படி குடும்பங்களின் வகைப் பிரிவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளுக்கான பணவீக்கப் பெறுமானத்தையும்,

(ii) பணவீக்கத்தைக் கருத்தில் எடுக்காது 2004 ஆம் ஆண்டை ஓர் அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 2007 ஆம் ஆண்டுவரை அவர்கள் பெற்ற தொகையின் உண்மைப் பெறுமதியையும்,

(iii) பொருளாதாரத்தைத் தவறாகக் கையாண்டதன் விளைவாக உயர் பணவீக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக சமுர்த்தி பெறுநர்களின் கொள்வனவு செய்யும் ஆற்றலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0037/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் யூன் 30 ஆம் தேதியன்று ள்ளவாறு சமுர்த்தி வாழ்வாதார உதவியைப் பெற்றுக்கொண்ட குடும்பங் களின் எண்ணிக்கை யையும்,

(ii) பெற்றுக்கொண்ட உதவித் தொகையின் பிரகாரம் மேற்படி குடும்பங்களின் வகைப் பிரிவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளுக்கான பணவீக்கப் பெறுமானத்தையும்,

(ii) பணவீக்கத்தைக் கருத்தில் எடுக்காது 2004 ஆம் ஆண்டை ஓர் அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 2007ஆம் ஆண்டுவரை அவர்கள் பெற்ற தொகையின் உண்மைப் பெறுமதியையும்,

(iii) பொருளாதாரத்தைத் தவறாகக் கையாண்டதன் விளைவாக உயர் பணவீக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக சமுர்த்தி பெறுநர்களின் கொள் வனவு செய்யும் ஆற்றலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0348/ '08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மேற்படி அமைச்சுப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அவர் இற்றைவரை விஜயம் செய்த வெளிநாடுகள் யாவையென்பதையும்,

(ii) அவற்றின் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விஜயங்களின் போது அவருடன் கலந்து கொண்ட உத்தியோகத்தர் களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(ii) மேற்படி விஜயங்களின் போது அவரின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்களாயின் இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

(iii) அவர் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பனி மற்றும் வகுப்பு யாதென்பதையும்,

(iv) மேற்படி விஜயங்களுக்காக அவருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கம் செலவு செய்த பணத்தொகை யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி விஜயங்களினால் இந்நாட்டிற்கு கிடைத்த வெளிநாட்டு உதவி, வெளிநாட்டுக் கடன் கருத்திட்டம் அல்லது வேறு அனுகூலங்கள் யாவை யென்பதை ஒவ்வொரு விஜயத்திற்கும் உரியவாறு வெவ்வேறாக அவர் குறிப் பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0353/ '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995 ஆம் ஆண்டில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களை சேர்த்துக்கொள்ளும் போது அவர்களுக்கு இருந்திருக்க வேண்டிய அடிப்படை தகைமைகள் என்ன என்பதையும்,

(ii) சேர்த்துக் கொள்ளப்பட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் ஒரு பகுதியினர் விவசாய திணைக்களத்துக்கு உள்ளீர்க்கப்பட்டார்களா,

(ii) அவ்வாறெனின், அவர்களின் எண்ணிக்கை என்ன,

(iii) அதற்கான காரணம் என்ன

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0359/ '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா அபிவிருத்தி வங்கியில், பயிலுனர் வங்கி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2006.05.27 ஆம் திகதி நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் யாரென்பதை இவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைக் கிரமமாக அவர் இச் சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் யாரென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பண்டாரவெவதென்ன, வைத்தியசாலை மாவத்த, இல. 37/8 சி என்ற முகவரியில் வதியும் செல்வி அஸ்மியா சாருக் தெரிவு செய்யப்படாததன் காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0402/ '08

7.

கௌரவ அசல ஜாகொடகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0403/ '08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0404/ '08

9.

கௌரவ அசல ஜாகொடகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடுகள் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0522/ '08

10.

கௌரவ அனுர திசாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசாங்கத்துக்குச் சொந்தமாயிருந்த எயார் லங்கா விமானக் கம்பனியின் முகாமைத்துவமும் பங்குகளில் சதவீதமொன்றும் எமிரேட்ஸ் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட உடன்படிக்கை இரத்தாகியதன் பின்னர் அக்கம்பனி மீண்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0523/ '08

11.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007, மாச்சு மாதம் 31 ஆம் திகதிவரை அரசாங்கத்தினால் செலுத்தப்படவுள்ள மொத்தக் கடன் தொகை (திறைசேரி உண்டியல்கள் உட்பட) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் என்றவாறு தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை (திறைசேரி உண்டியல்கள் உட்பட) எவ்வளவு,

(ii) அத்தகைய ஒவ்வொரு ஆண்டின் பொருட்டும் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டுள்ள வட்டி மற்றும் கடன் தவணைத் தொகை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் தனித்தனியாக எவ்வளவு என்பதை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2006, மற்றும் 2007 மாச்சு 31 வரை வெளிநாட்டுக் கடன்கள் எந்த நிறுவனத் திடமிருந்து பெறப்பட்டுள்ளன,

(ii) அத்தகைய ஒவ்வொரு கடன் தொகையும் தனித்தனியாக எவ்வளவு,

(iii) அத்தகைய கடன்கள் பெறப்பட்ட வட்டி வீதம் மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0524/ '08

12.

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிரீமா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது அரசுக்கும் இந்நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நோக்கம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட உடன்படிக்கையை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இவ்வுடன்படிக்கையின் படி கோதுமை மா தொழிற்சாலை அரசுக்கு உரித்தாக வேண்டி இருந்தது எப்போது,

(ii) இத்தொழிற்சாலை அரசுடைமையாக்கப்படாமல் மீண்டும் பிரீமா நிறுவன த்திற்கு வழங்கப்பட்டதன் நோக்கம் யாது,

(iii) இந்நிறுவனத்தை மீண்டும் பொறுப்பளிக்கையில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை யாது,

(iv) இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததா,

(v) அவ்வாறாயின் , அது எப்போது,

(vi) குறிப்பிட்ட அமைச்சரவை நிருபம் யாரால் சமர்ப்பிக்கப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0540/ '08

13.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தின் 5வது பிரிவின் 33(3) ஆம் பிரிவிற்கிணங்க 2005.10.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பரந்தளவில் நாடு பூராவும் காணப்பட்ட கொத்தணி பேரூந்துக் கம்பனிகள் சட்டபூர்வமாக "ஸ்ரீ லங்கம" வாக மாற்றப்பட்டதென்பதையும்,

(ii) அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சி நிறுவனங்களை பொதுக்கம்பனிகளாக மாற்றுவதற்கான 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சட்டத்தின் 2 ஆம் வாசகத்திற் கமைவாக மேற்படி கம்பனிகளின் பங்குகளில் 49% ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதுடன் எஞ்சிய 51% அரசாங்கத்தின் பொறுப்பில் பேணிச் செல்லப்பட வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சட்டத்தின் 2 ஆம் வாசகத்திற்கமைவாக, அப்போதிருந்த மற்றும் இப்போதிருக்கின்ற பங்குதாரர்கள் 49% பங்கு உரிமையைக் கொண்டுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கை போக்குவரத்து சபை சட்டத்தின் மூலம் கொத்தணி பேரூந்துக் கம்பனிகள் மீண்டும் இலங்கை போக்குவரத்து சபையாக கேந்திர மயப்படுத்தப்பட்டுள்ளதனால் பொதுக்கம்பனிகளாக மாற்றப் பட்டபோது ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதியை மீண்டும் இவர்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை அவர் மேற் கொள்வாரா?

(ஈ) ஆமெனில், எப்பொழுது?

(உ) இன்றேல், ஏன்?

0541/ '08

14.

கௌரவ எம்.ஜோசப் மைக்கல் பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்ச ருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வங்கியின் போக்குவரத்து பிரிவுக்கு உரித்தாக இருந்த, 65-1986, 65-1988 மற்றும் 65-1990 ஆம் இலக்கமுள்ள பிராடோ வகையைச் சேர்ந்த மூன்று வாகனங்கள் காணாமல் போயுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாகனங்கள் தொடர்பாக பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளனவா என்பதையும்,

(ii) மேற்கூறிய வாகனங்களை மீண்டும் இலங்கை வங்கியின் போக்குவரத்து பிரிவுக்கு பெற்றுக்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(iii) இந்த வாகனங்களை வெளிவாரி நபர்கள் பயன்படுத்துவதாக இருப்பின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை யும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இந்த வாகனங்கள் மூன்றும் கடமை நிமித்தம் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகளை வெவ்வேறாகவும்

(ii) அவர்கள் இது தொடர்பாக குறிப்பிட்ட போக்குவரத்து பிரிவுக்கு அறிவித்துள் ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0542/ '08

15.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கணனி பயிற்சி அடிப்படையில் பயிற்சியாளர்கள் 36 பேர் நகர அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த பயிற்சியாளர்களுக்கு பயிற்சியைப் பெறுவதற்கான ஆகக் கூடிய தகமை இருக்கின்றது என்பதையும்,

(ii) பயிற்சியாளர்கள் பயிற்சி காலத்தில் மூன்று மாதங்களுக்கொரு தடவை என்ற அடிப்படையில் சேவை நீடிக்கப்பட்டு தொடர்ச்சியாக 02 வருடங்களுக்கு அதிகமான காலம் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்பதையும்,

(iii) இந்த பயிற்சியாளர்கள் மத்தியில் 05 வருடங்களுக்கும் அதிகமான காலம் பயிற்சி பெற்றவர்கள் உள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) நகர அபிவிருத்தி அதிகாரச் சபையில் நிரந்தர ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதனால் தொடர்ச்சியாக சில வருடங்களாக பயிற்சி பெற்றுள்ள இந்த பயிற்சியாளர்களை மேற்கூறிய வெற்றிடங்களில் நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா,

(ii) அவ்வாறு எனின், அது எப்போது தொடக்கம் என்பதை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றத்தின் கட்டிடத் தொகுதியின் தற்போதைய நிலையினைப் பரிசோதனை செயவதற்கான தெரிகுழு,— பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியின் தற்போதைய நிலையினைப் பரிசோதனை செயவதற்காக 2005 பெப்புரவரி மாதம் 08 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, 2008 சனவரி மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009 பெப்புரவரி மாதம் 28 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

2.

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி(இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ அர்ஜுன ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி(இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான “2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்” அங்கீகரிக்கப்படுமாக.

*2.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— விலங்கின, தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) விலங்கின, தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) ஆம் பந்தியினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய 1547/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| தலைப்பு 142 — | கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*4.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.— இரண்டாம் மதிப்பீடு

*8.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*19.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*20.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர்

பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 | மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 | மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 | |

**உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 | மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 | மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 | |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்ட றிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*28.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

29.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.